பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 04 ஞாயிற்றுக்கிழமை (20-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 268

# உணவு கப்பல்களுக்கு பாதுகாப்பு: இணைக்கத்துக்கு வர அரசு மறுப்பு!

## பருத்தித்துறை துறைமுகம் வெறிச்சோடிக்கிடக்கிறது

வடமராட்சி, ஓக. 20

பருத்தித்துறை துறைமுகம் கடந்த மூன்று வாரங்களாக வெறிச்சோடிக் கிடக்கிறது.

கடந்த மாதம் 17 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்த ஹபரண கப்பல் மாவை இறக்கிவிட்டு 27 ஆம் திகதி புறப்பட்டுச் சென்றது. அதன் பின்னர் எந்தவொரு கப்பலும் பருத்தித்துறை துறைமுகம் வரவில்லை.

இங்குள்ள களஞ்சியங்கள் வெறுமையாக இருக்கின்றன. வாகன நடமாட்டமும் இல்லை.

கப்பல்கள் வராமையால் பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களும் சமயாசமய ஊழியர்களும் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர். (இ-173)

## அனுராதபுரம் தாக்குதலில் 6க்கு மேல் படையினர் பலி!

### "பவன்" முற்றாகத் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

அனுராதபுரம் மாவட்டம் விலாச்சிப் பகுதியில் படையினரின் பவள் கவசவாகனம் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் ஆறுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 6 படையினர் காயமடைந்ததாக மட்டுமே நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்திருந்தது.

விலாச்சிப் பகுதி நோக்கி பவள் கவசவாகனத்தில் வந்துகொண்டிருந்த இராணுவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகர பகுதியில் 7 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 20

மட்டக்களப்பு நகரப் பகுதியில் உள்ள பிள்ளையாரடியில் கடந்த வியாழனன்று இரவு பொலிஸாருடன் இடம்பெற்ற மோதலில் ஏழு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் றுக்மனதேவன் அல்லது அச்சுதன் [அழகப்போடி யோகராசா — வெல்லாவெளி]

★ இரண்டாம் லெப்டினன்ட் பக்தன் அல்லது ஸ்ரீகாந்தன் [வயிரமுத்து சுந்தையா — மண்டூர்]

★ வீரவேங்கை கடம்பன் [விநாயகமூர்த்தி திலகராஜா — பெரியபோரதீவு]

★ வீரவேங்கை தமிழ்நாதன் [கந்தசாமி சந்திரமோகன் — சந்திரவெளி] ஆகியோர் தாக்குதல் நடந்த இடத்திலும் —

★ இரண்டாம் லெப்டினன்ட் குலம் [கணபதிப்பிள்ளை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## செஞ்சிலுவைச் சங்க வரைமுறை நிராகரிப்பு

கொழும்பு, ஓகஸ்ட். 20

வடக்கே உணவுப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது விடயம் சம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு சமர்ப்பித்த புதிய வரைமுறைகளையும் அரசாங்கம் இரண்டாவது தடவையாகவும் நிராகரித்து விட்டது.

செஞ்சிலுவைச் சங்கம் முதலில் சமர்ப்பித்த வரைமுறைகளை [Modalities] அரசு நிராகரித்ததைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக — மீண்டும் — திருத்திய புதிய வரைமுறைகளை அரசுக்குச் சமர்ப்பித்திருந்தது. அவை குறித்துப் பேச்சுக்களும் நடைபெற்றன.

இம்முறை பேச்சுக்கள் சாதகமாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் —

செஞ்சிலுவைச் சங்கம் முன்னைய வரைமுறைகளை மாற்றியமைத்தபோதிலும் அவையும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருக்கின்றன என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஜனாப் எம். என். ஜுனைட் நேற்றுத் தெரிவித்தார்.

பருத்தித்துறைக்குச் செல்லும் கப்பல்களுக்கு மட்டுமே தங்களால் பாதுகாப்பு உத்த

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பார்ந்த வாசகர்களே!

பத்திரிகைத் தாளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக என்றுமில்லாதவாறு விலையும் மிக உயர்ந்துள்ளது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இது போன்ற நெருக்கடிகளை நாம் எதிர்கொள்ள நேர்ந்ததை நீங்கள் அறிவீர்கள்.

அப்போதெல்லாம் எம் மண்ணில் வாழும் மக்களின் கஷ்டம் உணர்ந்து, அந்தப் பளுக்களை நாமே தாங்கிக் கொண்டோம்.

இம்முறை எமது சக்திக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில், சரியாக நான்கு வருடங்களுக்குப் பின்னர் —

உதயனின் விலையை ஒரு ரூபாவால் உயர்த்த வேண்டியதாயிற்று.

இன்று முதல் உங்கள் உதயனின் விலை 6 ரூபாவாகும்.

எங்கள் நிலைமை அறிந்து இச்சிறு அதிகரிப்பை பொறுத்தருள வேண்டுகிறோம்.

— நிர்வாகத்தினர்

## தீர்வுத்திட்டம் வெறும் கண்துடைப்பு போர் நடத்துவதே அரசின் நோக்கம்

### பி. பி. ஸிக்கு விக்கிரமபாகு கருணாரத்ன பேட்டி

கொழும்பு, ஓக. 20

அரசின் இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டம் ஒரு வெறும் கண்துடைப்பு. போர் நடத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன நேற்று பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் வானில் இருந்து குண்டுகளை பொழிந்து கொண்டு ஆயுதங்களை கைவிடும்படி புலிகளிடம் கோருவது கேலிக்கிடமானது.

அரச சண்டையை நிறுத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு என்று ஒரு நிலம், வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு உட்பட சரியான அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசமைப்பு நிர்ணய சபை ஒன்று கூட்டப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு வெளியிட்டுள்ள தீர்வு யோசனைகள் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட இன்னொரு யுத்த தந்திரமாகும் என்றும் அவர் கூறினார். (இ-ஜ-4)

## தீர்வுத் திட்டத்தை எதிர்த்து மொரட்டுவை பல்கலை மாணவர் சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஓக. 20

அரசின் தீர்வுத் திட்டத்தை ஆட்சேபித்து மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த புதனன்று சத்தியாக்கிரகம் செய்தனர்.

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் ஐக்கிய ஸ்ரீலங்கா மாணவர் முன்னணி இந்த சத்தியாக்கிரகத்தை ஏற்பாடு செய்தது.

20 நிமிடங்கள் மட்டும் நீடித்த இந்த சத்தியாக்கிரகத்தில் அரசின் தீர்வுத் திட்டத்துக்கு எதிரான சுலோக அட்டைகளும் பதாகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

இந்த வைபவத்தில் கோட்டே நாக விஹாரை பிரதம குரு மதுலுவாவே சோபித தேரர் பேசுகையில் நாட்டை எட்டு பிராந்தியங்களாகப் பிரிப்பது எதிர்காலத்தில் நாட்டை பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்றும் இந்த தீர்வுத் திட்டம் நாட்டில் ஓயாத கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறினார். [இ]

## வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் சந்திரிகா மன்னிப்பு கோரவேண்டும்!

### ஐ.தே.க. பொதுச் செயலர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை கடந்த ஓராண்டு கால ஆட்சியில் நிறைவேற்றத் தவறிவிட்டது. இதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொது மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும்.

ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோறள இவ்வாறு கோரியுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஓராண்டு கால ஆட்சியை மீளாய்வு செய்யும் போது மக்களின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுள்ளது தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு என அரசு வெளியிட்டுள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் நிலைமையை மேலும் குழப்பிவிட்டுள்ளன. இந்த யோசனைகளை அரசு நாளுக்கு நாள் மாற்றிவருகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். [ஜ-6]

# G.C.C. வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்

**514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(கண்), மூக்கு, தொண்டை, காது, (E. N. T.) முறிவு மகப்பேறு சிறுபிள்ளைக்குரிய வைத்தியம், சரும நோய்கள், பல்கட்டுதல், பல்வைத்தியமும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். அரசாங்க வைத்தியசாலை
பழைய O. P. D. முன்பாக

நிர்வாகி

(38126)


# இதய அஞ்சலி

உடுவில் வலி. தெற்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த
கிராம அலுவலர் செல்வி கு. குனேஸ்வரி
[இணுவில் வட. கிழக்கு]
அவர்களின் அருமைத் தங்கை

## வீரவேங்கை விவேகானந்தி
(கௌரி)

அவர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அவருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரின் குடும்பத்தினரின் துயரிலும் பங்கு கொள்கிறோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்

பிரதேச செயலகம்,
வலி. தெற்கு, உடுவில்.

(சி/208 0)

# அறிவித்தல்

வண்-வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பொதுச்சபைக் கூட்டம் 20-08-95 நடைபெறுமென முன்பு அறிவித்திருந்தோம். மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. எனவே பொதுக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தருகின்றோம்.

செயலாளர்.

(37124)

# நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 20
நல்லூர் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் இருபதாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிழகச்சிகள் :-

★ நாவலர் மணி மண்டப முன்றலில் — மாலை 6மணி முதல் 7மணி வரை சௌந்தராம்பிகை- தியாகராசா பாட்டு.

7மணி முதல் 8-30 மணி வரை திரு. எஸ், பத்மலிங்கம் பாட்டு.

★ நல்லை ஆதீன கலா மண்டபத்தில்— திருமுறை வழிபாடும், பயிற்சிநெறி வகுப்புகளும் — காலை 8 30 மணி தொடக்கம் 1-00 மணி வரை.

நல்லை ஆதீனச் செயலர் திரு. மு. சிவராசா "பஞ்சாங்கம் பார்த்தல்- பொது அறிவு", சைவப்புலவர் திரு. க. செல்லத்துரை "ஞான சம்பந்தர் தமிழ்", சைவப் பெரியார் திரு. வ. பேரின்ப நாயகம், சைவப்புலவர் திரு. க. செல்லத்துரை பண்டிதர் திரு. மு. கந்தையா, சைவப் பெரியார் திரு. எஸ். தியாகராசா- விடயம் "புராண படனம்.

★ நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில்- பி ப. 3.00 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப்பேருரை— "திருமந்திரம்."

★ மேற்கு வீதியில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்—

மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் 'விஷ்ணு பாகவதம்' தொடர் இசைப் பேருரையில் 'கிருஷ்ணலீலை'.

[ஐ-30-111]

# 45-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
**20 — 10 — 1972**

மறைவு:
**07 — 07 — 1995**

## செல்வி நளாயினி இராஜகோபால்
(பேபி)
(மகாஜனக் கல்லூரி பழைய மாணவி)

எம் குலவிளக்கே!
எவ்விதம் பொறுப்போம்?

எம் மனத்திருக்கும் எம் குலவிளக்கே!
துன்பக் கடலில் துடிதுடிக்க
எம்மைப் பிரிந்த குலவிளக்கே!
இன்சொல் பேசி இன்முகம்காட்டி
அன்பை விளக்கிப் பிரியா திருந்தனை
இன்று நீ பிரிந்தனை நளாயினித் தெய்வமே!
நினையாத நேரம் மறைந்த குல விளக்கே!
எவ்விதம் பொறுப்போம் எம் குலவிளக்கே!
எம்முயிர் உள்ளவரை நின்நினைவு
எம் மனத்திரையில் நிலைத்த ஓவியமே!
மீண்டும் வரும் பிறவியிலும் உம்முடன்
உறவாட வேண்டுகிறோம் ஆண்டவனை.

என்றும் உனது நினைவில் வாழும்;
தாய், சகோதரர், மைத்துனன்,
உறவினர், நண்பர்கள்.

தற்காலிக முகவரி:
இல. 29, பலாலி வீதி,
கந்தர்மடம்.

மாத்தனை,
தெல்லிப்பழை.

[சி/2074]

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## காசிப்பிள்ளை - முருகுப்பிள்ளை

மலர்வு:
**23 — 03 — 1937**

உதிர்வு:
**23 — 08 — 1992**

ஆண்டு மூன்று ஆனாலும்
ஆறாத உன் நினைவலைகள்
பாசத்தின் உறைவிடமே
பாரினிலே நாம் வாழ
வழிகாட்டிச் சென்றவரே
வையத்தில் நாம் வாழும் வரையினிலே
உங்கள் நினைவுகளும்
எம்முடனே வாழ்ந்திருக்கும்.

மு அழகராசா குடும்பத்தினர்.

சுப்பர் மடம்,
பருத்தித்துறை.

[38125]

# நாவாந்துறை மண்ணின் முதலாவது பெண் அண்ணாவிக்கு பாராட்டு



திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேரா. நீ. மரியசேவியர் அடிகளின் நெறியாள்கையில் தேவசகாயம்பிள்ளை எனும் தென்மோடி நாட்டுக் கூத்து அண்மையில் பருத்தித்துறைப் பங்கில் மேடையேற்றப்பட்டபோது அதில் கதாநாயகியாக நடித்த திருமறைககலாமன்றத்தின் முன்னணி நடிகையருள் ஒருவரான

## செல்வி அமரசிங்கம் சாந்தி அவர்கள்

பருத்தித்துறை கோட்ட குரு முதல்வர்

**அருட்திரு P. M. இம்மனுவல் அடிகளால்**

பொன்னாடை போர்த்தி அண்ணாவியாகக் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 15ஆண்டுகளாகத் தனது தந்தையையே குருவாகக் கொண்டு நாட்டுக் கூத்து, இசைநாடகம் மற்றும் நாடகங்களில் சிறப்பாக நடித்ததுடன் சில நாடகங்களை நெறியாள்கையும் செய்துள்ள இவர் ஈழத்தின் நான்காவது பெண் அண்ணாவியும், நாவாய் மண்ணின் முதல் பெண் அண்ணாவியுமாவார்.

மேற்படி நிகழ்வில் அருட்திரு P. M. இம்மனுவல் அவர்கள் தலைமையுரையும், திருமறைக்கலாமன்ற இயக்குநர் பேரா. நீ. மரியசேவியர் அடிகள் அவர்களும், பொதுச் செயலர் திரு. V. J. கொன்ஸ்ரன்ரைன் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

— திருமறைக்கலாமன்றம்.

[சி-2078]

# ஆயுதக் கொள்வனவு, படைக்கு ஆட்சேர்ப்பு; இதுவே அரசின் தீர்வுத்திட்டத்தின் நோக்கம்

## பாதுகாப்பு நிதி பரப்புரைக் கூட்டத்தில் தமிழேந்தி

வடமராட்சி, ஓ. 20

தீர்வுத் திட்டத்தை வெளியிட்டு அதன் மூலம் சிங்கள இனவாதிகளை கூச்சலிடச் செய்து பெருந்தொகையானோரைச் சிங்களப்படைக்குச் சேர்ப்பதும், வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதுமே அரசின் திட்டமாகும்.

பிரேமதாஸா செய்தது போன்று தீர்வுத் திட்டத்தை தெரிவுக்குழுவிடம் விட்டுவிட்டு தமது ஆட்சியைக் கொண்டு நடத்தவே சந்திரிகா அம்மையாரும் முயன்று வருகிறார்.

—இவ்வாறு தெரிவித்தார். தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி.

பருத்தித்துறை தம்பசிட்டி பண்டாரி அம்மன்கோயிலடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு நிதி பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. ராஜன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. தமிழேந்தி தனது உரையில் தெரிவித்ததாவது:-

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழீழப் போராட்டம் முனைப்புப் பெற்றது. இதற்கு முன் தமிழ் மக்கள் பட்ட துன்பதுயரங்கள் தான் எமது போராட்டத்துக்கு காரணமாகின.

1948 இல் 10 இலட்சம் மலையக தமிழ் மக்களின் குடிஉரிமை பறிக்கப்பட்டது.

1958 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்டு தமிழ் மொழி இரண்டாம் தரநிலைக்கு தள்ளப்பட்டது.

இதே காலப்பகுதியில் தமிழர்கள் மீது இனக்கலவரம் மேற்கொள்ளப்பட்டது.

1961 இல் அகிம்சை முறையால் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்பட்ட போது ஆயுத முனையில் அது குழப்பப்பட்டது. 1970 இல் தரப்படுத்தலால் தமிழரின் கல்வி நசுக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 1977 இல் தமிழர்கள் மீது மீண்டும் இனக்கலவரம் மேற்கொள்ளப்பட்டது.

அதே காலப்பகுதியில் ஆசியாவின் முதன்மையான நூலகமான யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தில் சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவையே மக்கள் துன்பப்படக் காரணமாகும். போராட்டம் துன்பத்துக்கு காரணமல்ல.

சிங்களவர்கள் செய்த கொடுமைகள் தான் போராட்டத்துக்கு காரணமாகின. அதனால் தான் தலைவர் பிரபாகரன் தோன்றினார்.

### உலகத் தமிழருக்கான போராட்டம்

உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழத்தான் விடுதலைப் போராட்டம் இங்கு நடைபெறுகிறது. மக்கள் விரைவில் ஒன்று திரண்டால் விடுதலை விரைவில் கிட்டும்.

இந்தியாவில் இருந்து விஜயன் வருவதற்கு முன்னர் இந்நாடு முழுவதும் தமிழர்கள் வாழ்ந்தார்கள். இன்று தமிழர்கள் குந்தியிருக்க நிலம் இலாத நிலையில் இருக்கின்றனர்.

விஜயனின் வருகைக்கு முன்னர் இந்நாட்டில் இயக்கர்களும் நாகர்களும் — அதாவது இவ்விரு தமிழ் சமூகங்களும் இந்நாட்டில் வாழ்ந்து வந்தன. இயக்கர்கள் சிங்களவர்களாக மாறியுள்ளார்கள். அன்றைய காலங்களில் பெருமளவு தமிழர்கள் சிங்களவர்களாக மாறியுள்ளனர்.

புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு போன்ற பகுதிகள் தமிழர் தாயகமாக அன்றைய காலங்களில் இருந்துள்ளன.

ஏனெனில் அன்றைய காலத்தில் இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர் தமிழ்ப் பெயர்களைப் பயன்படுத்தித்தான் ஆங்கிலத்தில் இடப்பெயர்களை சூட்டியிருந்தார்கள். நீர்கொழும்புக்கு சிங்களத்தில் ''மீகமுவ'' என்று கூறப்படுகிறது. ஆனால் ஆங்கிலேயனோ தமிழ்ப் பெயரான நீர்கொழும்பை ''நெகம்பு'' எனப் பெயர் கொண்டு அழைத்தான்.

இதே போலத்தான் புத்தளம், சிலாபம் போன்றவற்றின் இடப்பெயர்களும் ஆங்கிலத்தில் அமைந்துள்ளன. இவையெல்லாம் தமிழர்கள் தான் அங்கு வாழ்ந்தார்கள் என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

தமிழர்கள் சிங்களவர்களாக மாற்றம் பெற்றமை, சிங்களவர்களின் பிறப்புவீதம் அதிகரிப்பு, தமிழர்களின் வாழ்க்கை முறை இவற்றின் காரணமாக தமிழ் மக்களின் சனத்தொகை இந்நாட்டில் குறைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

### தமிழரின் பிறப்பு வீதம்

தமிழர்களின் வாழ்க்கை முறையில் காணி, வீடு, நகை என்ற சீதனப் பிரச்சினைகள் இருந்தமையால் தான் பிறப்பு வீதம் குறைந்தது. இதனால் உரிய திருமண வயதில் திருமணம் செய்யாத நிலையில் ஆண்கள், பெண்கள் நிறையப் பேர் உள்ளனர். இதுவே தமிழரின் பிறப்பு வீதம் குறையக் காரணமாகும்.

சிங்களவர்களில் ஒரு சிலர் இன்றைய கால கட்டத்தில் பொருள் சேர்க்கும் நிலைக்கு மாறிய போதிலும், முன்னைய காலங்களில் மட்டுமல்ல இப்போதும் கூட அவர்களின் வாழ்க்கை முறை ஒரு பொழுது போக்காகவே இருக்கிறது. அவர்கள் உரிய வயது வந்ததும் திருமணம் புரிகிறார்கள். சீதனம் என்றோ, பொருள் பண்டம் என்றோ அக்கறை கொள்வதில்லை. நன்றாக உண்டு வருந்தி வாழ்ந்தால் போதுமானது என்று வாழ்வதால்— வாழ்ந்து வருவதால் — அவர்களின் பிறப்பு வீதம் அதிகரித்தது.

1881 இல் நடத்தப்பட்ட குடிசனமதிப்பீட்டுடன், இப்போதுள்ள குடிசன மதிப்பீட்டை உற்று நோக்கும் போது பிறப்பு வீதம் பற்றிய உண்மை புலனாகிறது.

### துரோகிகள் வரலாறு தொடர்கிறது

தமிழர்களின் வரலாற்றில் காலத்துக்குக்காலம் துரோகிகள் இருந்து வந்துள்ளனர்.

முதன் முதலில் சுந்தரலிங்கம் டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபையில் சேர்ந்ததால் இலங்கைக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இது 1947 இல் இடம் பெற்றது.

தொடர்ந்து 1948 இல் ஜி. ஜி பொன்னம்பலம் 10 இலட்சம் தமிழர்களின் குடி உரிமை பறிப்புக்கு ஆதரவளித்து துரோகமிழைத்தார். பின்னர் துரையப்பா செய்த துரோகத்தால் தமிழராய்ச்சி மாநாட்டில் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இந்திய நலனுக்காகச் செய்யப்பட்ட இலங்கை— இந்திய ஒப்பந்தத்திற்கு அமிர்தலிங்கம் ஆதரவு கொடுத்து துரோகமிழைத்தார்.

ஈழத்தமிழர் நலனுக்காக இலங்கை இந்திய — ஒப்பந்தம் செய்யப்படவில்லை இந்து



செ. தமிழேந்தி

சமுத்திரத்தில் தனிக்காட்டு ராஜாவாகதான் இருக்க வேண்டும் என்ற தன்னுடைய நலனுக்காக இந்தியாவால் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தினால் உருவான மாகாணசபைக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று இந்தியாவின் அடிவருடிகளே அன்று கூறினார்கள்.

அத்துடன் ஈழப்பிரகடனம் செய்யப் போவதாகவும் தெரிவித்தார்கள். அவ்வேளை இந்தியா எதுவுமே செய்யவில்லை.

இந்திய இராணுவத்தினால் எட்டாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன பெருந்தொகையான பெண்கள் கெடுக்கப்பட்டனர். இவற்றுக்கெல்லாம் அமிர்தலிங்கம் துணை போனார்.

### ஈழக் கோரிக்கை

முதன் முதலில் ஈழக்கோரிக்கையை முன் வைத்தது தலைவர் பிரபாகரனோ, தந்தை செல்வநாயகமோ அல்ல. சேர். பொன் அருணாசலமே 1923 இல் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தார்.

இலங்கையின் சுதந்திரத்துக்காக சிங்களவர்களை ஒன்று திரட்டி 1919 இல் அமைப்பு ஒன்றை உருவாக்கி போராடிய சேர் பொன் அருணாசலம் 1922 இல்— அதாவது மூன்று ஆண்டுகளில் — தேசிய காங்கிரஸை உருவாக்கினார். தமிழர்கள் சுதந்திரமாக வாழ ஒரே வழி என தமிழ் ஈழக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

சிங்களவர்களுடன் இணைந்து போராடிய மூன்றாண்டுகளில் சேர். பொன் அருணாசலம் அவர்களின் உண்மை நிலையை புரிந்து கொண்டு தூரநோக்கோடு தமிழீழக் கோரிக்கையை முன் வைத்தார்.

40 ஆண்டுகளுக்கு மேலாக ஏமாற்றப்பட்டு வரும் எங்களில் சிலருக்கு இது இன்னமும் புரியாதுள்ளது.

### அடிக்கடி கொள்கைமாறும் சிங்கள தலைவர்கள்

சிங்களத் தலைவர்கள் கொள்கை மாறுபவர்கள் 1958 இல் பண்டா — செல்வா ஒப்பந்தம், 1965 இல் டட்லி செல்வா ஒப்பந்தம் ஆகியன அமுல் படுத்தப்படவில்லை.

தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படும் எனக் கூறி 1970 இல் ஆட்சிக்கு வந்த சுதந்திரக் கட்சி ஆட்சியில் கொண்டு வந்த புதிய அரசியல் திட்டம் 1977 இல் ஆட்சிக்கு வந்த யு. என். பியின் அரசியல் திட்டம் என்பன வற்றில் தமிழர்களின் உரிமை மறுக்கப்பட்டது.

ஆட்சிக்கு வருமுன்னர் தமிழர்களுக்கு எல்லாம் தரப்படும் எனக் கூறும் சிங்களத் தலைவர்கள் ஆட்சிக்கு வந்ததும் தமது கருத்துக்களை மாற்றிக் கொள்வார்கள்.

இது வரலாறு எமக்கு கற்பிக்கும் பாடமாகும்.

இதேபோலவே சந்திரிகாவும் சமாதான வேடம் பூண்டு வந்தார். அவரது முகமூடி உலக அரங்கில் கிழிக்கப்பட்டுள்ளது.

### உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது

புதிய அரசியல் தீர்வுத் திட்ட யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பு, காணிக்குடியேற்ற அதிகாரம், வெளிநாட்டுக் கடன் வசதி பெறுதல் என்பன இருக்காது என்றும்— பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு எனவும் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. இது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைபோல போகிறது.

தீர்வு யோசனைகளை முன் வைத்து இனவாதிகளை கூக்குரலிடவைத்து பெருந்தொகையானோரை சிங்களப் படைக்கு சேர்ப்பதும், உலகில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதுமே அரசின் திட்டமாகும்.

தீர்வுத்திட்டம் நிராகரிக்கப்பட்டால் 18 வயதுக்கு மேற்பட்ட சிங்களவர்களை கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்துவோம் என அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

பௌத்த அமைப்புகள் இத்தீர்வுத் திட்டத்தினால் சிங்கள இனம் அழிகிறது. எனக் கூக்குரலிடுகிறார்கள்

பிரேமதாசா போல தீர்வுத் திட்டத்தை தெரிவுக் குழுவிடம் விட்டு தனது ஆட்சிக் காலம் முழுவதும் காலத்தை கடத்த அம்மையாரும் முயன்று வருகிறார்.

உலகில் தோன்றிய ஐந்து மூத்த மொழிகளில் தமிழும் ஒன்று. மூத்த குடியினரும் தமிழர்கள் தான்,

ஒரு காலத்தில் இலங்கையும் இந்தியாவும் தமிழரின் நாடுகளாக இருந்தன. இன்றோ உலகில் தமிழன் அகதியாக அலைகிறான்.

எமது நாடு மீட்டெடுக்கப்படவேண்டும். எமது நாட்டை மீட்டெடுக்கும் வலிமை எமக்குண்டு.

எமது தேசிய தலைவரின் காலத்தில்தான் தமிழ் ஈழத்தைப் பெறலாம்.

தமிழர்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்தவர் தலைவர் பிரபாகரன்.

### தலைவரின் மதிநுட்பம்

அவரின் மதிநுட்பத்தினால் தான் உலகத்தில் தமிழர்கள் இன்று தலைநிமிர்ந்து வாழ்கிறார்கள். யாருமே நினைத்துப் பார்க்க முடியாதவாறு மகளிர் படை ஒன்றை உருவாக்கியுள்ளார். அப்படை இன்று வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து வருகிறது.

நாம் தமிழர்கள். இது தமிழர்களின் விடுதலைப் போராட்டம் என்பதை மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.

எங்கள் நாடு விடுதலை பெற்றால்தான் நாம் நிம்மதியாக வாழ முடியும்.

இதுவே ஒவ்வொரு தமிழர்களினதும் கருத்தாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் நிதி அதிகம் வைப்பிலிடப்பட்டுள்ள இலங்கை வங்கி மக்கள் வங்கி ஆகியவற்றிலிருந்து 5 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாகப் பெற்று அரசு ஆயுதங்களை வாங்கவுள்ளது.

இந்நிலையில் நாமும் எமது பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு 100 கோடி ரூபாவையே கேட்கிறோம்.

நாம் உங்களை கட்டாயப்படுத்தவில்லை. வசதிக்கேற்றபடி நிதி தாருங்கள்.

மீட்பு நிதி பெறப்பட்ட போது வசதி குறைந்தவர்கள் ஒரு பவுண் தருவதாகச் சொன்னார்கள். அதனைக் கருத்தில் கொண்டே குறைந்தவர்களின் வசதி கருதி 5 ஆயிரம் ரூபாய் என்றோம். 5 ஆயிரம் தான் என்று நின்று விடாமல் உங்களுக்கேற்ப பங்கைச் செலுத்துங்கள் — என்றார். (ஐ-173)

---

நல்லூர் உற்சவகால அர்ப்பணம்

## வேல்விடு தீர நல்லூரா!

ராகம்: தர்பாரி கானடா — தாளம்: ஆதி

பல்லவி

தேவர் கொடுந்துயர் தீர – வேல்விடு
தீர காங்கேய- சிவனார் குமார
(தேவர்)

அனுபல்லவி

சூரர்க்கொரு கால காரித்திகையர்
பால சரவணா வடிவேல
[தேவர்]

சரணம்

வேடுவர் புரிகின்ற பூசை உகந்தாய்
தேன் தினை மாவையும் தேடி நடந்தாய்
மாமயில் ஏறிஇவ் வையம் அளந்தாய்
சேவல் கொடியுடையாய்- நல்லூரா
(தேவர்)

— சோ. பத்மநாதன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கருமையிர் கொண்ட கருமைகூடிய அல்ஷேசன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு க. பரராஜசேகரம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (விறகுசாலைக்கு அருகில்). (38090)

செங்கரும்பு மொத்தமாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். வை. பேரம்பலம் ஆசிரியர், தலையாளி கொக்குவில். (38086)

10 அடி அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: காலை 9 மணி — 12 மணி வரை. சரன், ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் (நிரு கல்வி நிலையத் திற்கு எதிர்). (38093)

வீட்டுத் தளபாடங்கள், நாய்க்கூடுகள் Love Birdsகூடு, மீன் தொட்டி, மாஸ்லைகள், Laying Point 100 பேடுகள் உடன் விற்கப்படும். ஆதவன் சைக்கிள் ஸ்ரோர்ஸ், மில்லர் வீதி, நெல்லியடி. (38103)

German Sheperd நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு, தொடர்பு 38/1, 5ஆம் குறுக் குத்தெரு, யாழ்ப்ப ணம். (38117)

பெண்களுக்குரிய ஏஸியா சைக்கிளும், உத்தமான நல்லின இரண்டு வயது நிரம்பிய பொமனேரியன் பெண் நாய்க் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு 15 சென்பீற்றர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [அடைக்கல மாதா கோவிலுக்கு சமீபமாக.] (38118)

40 நாட்கள் நிரம்பிய நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகளும், $1\frac{1}{2}$ வயது நிரம்பிய அல்ஷேசன் பெண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு 15/2 ஒடை லேன் (ராதா ஒழுங்கை) வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (38072)

சாப்பாட்டு மேசை 1, அலுவலக மேசை 1, இரு சோடி சைக்கிள் கப்பிறேக் செட், பொமனேரியன் நாய்க்குட்டிகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு தேநீர்க் கடை, சட்டநாதர் சிவன் கோயில் முன்பாக, நல்லூர். [38110]

3 மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் 386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (38114)

பூச்சி நீக்கிய $1\frac{1}{2}$ மாத நல்லின அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு K. சண்முகநாதன் கனகரட்ணம் றோட் 258, நாயன்மார்க்கட்டு. [8644]

இரண்டு மாதம் நிரம்பிய வெள்ளை பொமனேரியன் இன (Japanees Spit) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கியவை வேண்டியவர் தொடர்பு கொள்ளவும் அ. தியாகராசா, 67/17, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். அல்லது 23, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (8645)

## சீயாக்காய்ப் பவுடர்

இப்போது காவேரி சீயாக்காய்ப் பவுடரில் கருசலாங்கண்ணி என்னும் மூலிகை சேர்த்துத் தயாரிக்கப்படுவதால் உங்கள் கூந்தல் கருமை நிறமாகவும் நீண்டு வளரக் கூடியதாகவும் உதவுகிறது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். (37851)

## மலிவு விற்பனை

சமய நூல்கள், பக்தி இலக்கியங்கள், இலங்கை – இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் பாடசாலை உபகரணங்கள் யாவும் விற்பனையாகின்றன. ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். [38077]

இன்று மாலை இனிக்கோழிகள், சில்க்கி, ஹங்கேரியன் பிறாமா, மணித்தாரா, வெள்ளடியன், வெலுவைவாத்து என்பன விற்பனைக்கு உண்டு N. ரமேஷ், C/o K. நித்தியானந்தன், (வட்டுக்கோட்டை வீதி), சித்தன் கேணி (சுப்பர் சோனிக் அடுத்த இடம்). (கடைசி விற்பனை) [38051]

## O/L 95

பரீட்சைக்கான எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடையுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8648]

## றோணியோ, தட்டச்சு

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகள் சிறப்பாகச் செய்து தரப்படும் Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8647]

## கணிதம் - 95

துரித மீட்டல், (O/L) வரைபு புள்ளிவிபரவியல், நிகழ்தகவு, தேற்றங்கள், மடக்கை, விருத்திகள், பரப்பளவு, கனவளவு, திரிகோண கணிதம், தனிவட்டி, கூட்டு வட்டி ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (38121)

## மிருதங்கம்

புதிய 22 அங்குல பலா மிருதங்கம் 3000/- பரீட்சித்துப் பெற்றுக் கொள்ளலாம். K. விஜயகுமார், இல: 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். [38062]

## மணமகன்மார் தேவை

குற்றமுள்ள 38 வயது விஞ்ஞான பட்டதாரிக்கும், 33 வயது ஆசிரியைக்கும், குற்றமற்ற 38 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும், 49 வயது கத்தோலிக்கருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [38098]

## சோதிடம்

ஜெனன சாதகக் குறிப்பு எழுதிக் கொள்ளவும் மற்றும் சாதகபலன் பார்க்கவும். தொடர்பு கொள்க: சோதிடர் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (38096)

## மணப்பெண்கள் தேவை

35, 32 வயது பிரான்சிலுள்ள கத்தோலிக்கருக்கும், குற்றமற்ற 42 வயது கனடா மணமகனுக்கும், 40 வயது B Sc. ஆசிரியருக்கும், 61 வயது சைவபோசன மணமகனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (38097)

## சனி [வக்கிர] மாற்றம்

சத்தியாவின் ராசிப்பலன்கள் எங்கும் கிடைக்கும். தீர்வுத் திட்டம் செயலிழப்பு. மீண்டும் இராணுவ நடவடிக்கை படுதோல்வி, பாரிய படைமுகாம் வீழ்ச்சி. முதலியவற்றை சனிவக்கிரம் உண்டாக்கும். கனகா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. (8643)

## மணமகன் தேவை

வயது 38, அரசாங்க உத்தியோகம் (நிரந்தரம்), மகம் 1ஆம் பாதம், செவ்வாய் 12, உள்ள மணமகளுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. தொடர்பு: இல. 827, மே/பா உதயன். யாழ்ப்பாணம். [38119]

## பீலித் தகரம்

35 புதிய பீலித் தகரம் கேஜ் 28 நீளம் 10 அடி அகலம் 33 அங்குலம் விற்பனைக்குண்டு. சி ஞானசுந்தரம், உச்சி ஒடை மானிப்பாய். (38116)

## ஓடுகள் விற்பனைக்கு

தட்டு ஓடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம. பொன்னையா பிரதான வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பு. (38102)

## விற்பனையாகின்றது

செங்கை ஆழியானின் நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் அனைத்தையும் மலிவு விலையில் நல்லூர் உற்சவ தினங்களில். நல்லூர் ஆலய வீதியிலுள்ள பூபாலசிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த்தாய் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (37994)

## புலமைப் பரிசில்

பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எமது பயிற்சிகள் மூலம் உங்கள் பிள்ளைகளை பரீட்சையில் வெற்றி பெறச் செய்யுங்கள். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8646)

## ஆண்டு 9 கணக்கியல்

கனிஷ்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான கணக்கியல் பயிற்சிப் புத்தகம் எல்லா புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. G.C.E. (O/L) மாணவர்களுக்கான வர்த்தகம் வினாவிடைத் தொகுப்பு புத்தகமும் மீண்டும் வெளிவந்துவிட்டது. ஆக்கம் த. தர்மராஜன். [38100]

---


# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

# முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கவுள்ளன...

நீங்கள் ஒரு தொழிற்றுறைப் பட்டதாரியாய் உருவெடுக்க மிகச் சுலுவான மார்க்கத்தை நாங்கள் சமைக்கின்றோம் இங்கே தொடங்கும் பயிற்சி நெறி உங்களை திறந்த பல்கலைக் கழகத்திற்கு பாடவிதான விலக்குகளுடன் இட்டுச்செல்லும் மாணவர்களே! தொடர்புகள் அறுந்து போயுள்ள அகாலத்தில் இது ஓர் அற்புத வாய்ப்பு. வசப்படுத்திக் கொள்ளுங்கள்!!

## TECHNICIAN DIPLOMA COURSES
(ENGLISH MEDIUM)

(இப் பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Civil Engineering & Quantity Surveying
2. Electronics & Electrical Engineering
3. Mechanical Engineering

Duration 3 years
Educational Qualification: Six Subjects in G.C E. (O/L) including
Maths - C
Science - C
English - S

We guide you through the simplest path to emerge as a "Graduate in Technology"

Our Courses lead you to the open University of Sri Lanka with exemptions!

At a state of total breakdown in communication, it's a fine opportunity!

It's your's If you are looking for it!

## DIPLOMA COURSES
(ENGLISH MEDIUM)

(இப்பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டையிலும் நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளையிலும் நடத்தப்படும்)

1. Civil Draughtsmanship — 1 Year
2. Computer Programming & Data Processing — 1 Year (Basic, Cobal, d-Base III+ & Pascal)—Practicals on IBM - PCAT & MAT 385 industrial Controller
3. Advanced Diploma in Computing — 1 Year (Syllabus includes British Computer Society & Australian Computer Society Syllabii)

**Educational qualification,**

Six Passes in G. C. E. (O/L) with Maths-C & English - S and for advanced computing, two Passes in G. C. E. (A/L)

## TECHNICIAN CERTIFICATE COURSES
(ENGLISH MEDIUM)

(வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Air Conditioning & Refrigeration $1\frac{1}{2}$ years
2. Radio & T. V. Servicing — 1 year
3. Automobile Technology — 1 year

**Educational qualification:**
G. C. E. (O/L) with Maths & Science - S

## CRAFT COURSES
(TAMIL MEDIUM)

[வட்டுக்கோட்டையில் மட்டுமே நடத்தப்படும்)

1. Machine Shop Practice — 1 year (இயந்திரப் பட்டறைப் பயிற்சி)
2. Electrical Wiring & Installation Practice— 1 year (மின்னிணைப்பும் நிர்மாணமும்)
3. Welding Practice. 1 year (உலோக ஒட்டுவேலைப் பயிற்சி)

கல்வித்தகைமை: க. பொ. த- (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்.

இதரவசதிகள்:

1. நூலகம்
2. விடுதி (இருபாலாருக்கும்) தனித்தனியே
3. விளையாட்டுத்துறை (இதில் ஆர்வமுள்ளோர்க்கு விசேட பயிற்சி மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.)

விண்ணப்பப்படிவம்:- ரூபா 40-00 செலுத்தி தொ. நு. கல்லூரியின் வட்டுக்கோட்டை காரியாலயத்திலும். யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையத்திலும் (யாழ். பொது மருத்துவமனை முன்பாக) பெற்றுக் கொள்ளலாம். நேர்முகப் பரீட்சை ஆவணி 29ஆம் 30ஆம் திகதி வட்டுக்கோட்டை விலாசத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நடைபெறும்

க. பொ. த. [உ/த] ஓகஸ்ட் 95 பரீட்சார்த்திகளுக்கு இப்பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

பயிற்சி நெறிகள் செப்ரெம்பரில் ஆரம்பிக்கவுள்ளன.

★ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

(சி-1983)

**DIRECTOR**

# சந்திரிகாவின் ஒரு வருட ஆட்சியில் படையினருக்கு பாதக விளைவுகள்

## ஹரி குணதிலக சாடுகிறார்

கொழும்பு, ஓக. 20
பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த ஒரு வருடகாலத்தில் பாதுகாப்பு படையினர் பெரும் பாலும் பாதகமான விளைவுகளையே எதிர் கொண்டுள்ளனர்.

முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மாஷல் ஹரி குணதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்காலப் பகுதியில் விமானங்களும், போர் கப்பல்களும் அழிக்கப்பட்டுள்ளன. சுமார் ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். என்றும் ஹரி குணதிலக தெரிவித்தார்.

இதேவேளை— புதிய அரசு ஆட்சிக்கு வந்த ஒருவருட காலப்பகுதியில் அதிகாரிகளின் பலவீனமையும், ஊழலையும் அகற்ற முடியாத நிலையில் சிக்கித் திணறுவதாக அவதானிகளை மேற்கோள் காட்டி "வெரித்தாஸ்" வானொலி தெரிவித்தது. [-ஐ-6]


## ஆண்டுகள் ஐந்தாகியதோ!

அன்னை மடியில்:
27 — 07 — 1934



ஆண்டவன் அடியில்:
20 — 08 — 1990

### அமரர் மனவல் டோமினிக் (வாஸ்)

செல்லமாய் வளர்த்து விட்டு
சொல்லாமல் போன ஐயா!
சென்ற இடத்தில் ஐந்தாண்டு கழிந்தாலும்
சொர்ப்பனத்தில் பல கதைகள் பேசி
செப்பிடுகிறீர் உலக வாழ்க்கையினை
சொல்லாமல் நாம் விடுகின்ற கண்ணீரை
இங்கு யாரறிவார் ஐயா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல: 41 ஒடக்கரை வீதி,
யாழ்ப்பாணம். (38055)


## பேராயர் ஜெபநேசனுக்கு கௌரவ பதவி

யாழ்ப்பாணம் தென்னிந்தியத்திருச்சபை பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன், மதுரை காமராஜர் பல்கலைக்கழக கலாநிதி (பி. எச். டி.)பட்ட ஆய்வின் மதிப்பீட்டாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

முதல் முறையாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இப்பதவி வழங்கப் பட்டிருக்கிறது. அத்துடன்பல் கலைக் கழகத்துக்கு வெளியே இருந்து இப் பதவிக்கு ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதும் இதுவே முதல் முறையாகும். (ஐ)


## சாந்திகம் உளவியற் சான்றிதழ் அடிப்படைப் பயிற்சி

மேற்படி பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படும். விரிவுரைகள் தமிழிலும்-ஆங்கிலத்திலும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை பெற விரும்புவோர்:

'சாந்திகம்"
15 கச்சேரி — நல்லூர், வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் 22-08-95 தொடக்கம் கிழமை நாட்களில், அலுவலக நேரங்களில். ரூபா 10/- செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

இவ் அலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

பூர்த்தியாக்கப்பட்ட படிவங்களை 31-08-95 க்கு முன் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

— நிர்வாக உத்தியோகத்தர்.

(சி-2079)

## இடமாற்றம்

173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இதுவரை காலமும் இயங்கிவந்த

மைக்றோன் என்ஜினியரிங் சென்ரர்

என்னும் எமது தொழிற்கூடம் 21 — 08 — 95 திங்கட்கிழமை தொடக்கம்

கண்ணன் தொழிற்கூடம்

என்னும் பெயருடன் 66, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கட்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

தகவல்
உரிமையாளர்

(38113)

# YALTHO SMART







சிறந்த மென்பானத்திற்கு
மாறுங்கள்

பல் நாட்டு
தொழில் நுட்பின் பின்னணியில்
சுகாதார விதிகளுக்கு அமைய தயாரித்து
காஸ் ஊட்டிய
வளர்ச்சிக்கு வேண்டிய கல்சியம், சக்தி,
விற்றமின் B அடங்கியது

'யாழ்தோ சிமாட்

விற்பனையாளர் தொடர்பு கொள்ளவும்:
பல்நாட்டு உயிர் நுட்பு (தனியார்) வரையறுக்கப்பட்டது
234, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

BIOTEC

(38115)

# வடக்கில் போரைத் தீவிரப்படுத்த மேலும் இரு புதிய படைப் பிரிவுகள்

கொழும்பு, ஓக. 20

வடபகுதியில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைக்காக மேலும் இரு புதிய படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

''தினமின'' சிங்கள நாளிதழ் இத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஏற்கெனவே வடக்கில் போரிடுவதற்கென 4 படைப் பிரிவுகள் உள்ளன.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த இரு படைப்பிரிவுகளுடன் சேர்த்து மொத்த ஆறு படைப்பிரிவுகள் வடக்கு படை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும்.

புதிய படைப்பிரிவுகளுள் ஒன்றுக்கு பிரிகேடியர் நீல் டயஸும் இரண்டாவது படைப் பிரிவுக்கு பிரிகேடியர் ஜீ. ஈ. கருணாரத்னவும் கட்டளையிடும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த 6 படைப்பிரிவுகளில் ஒன்று திருகோணமலையில் நிலைகொள்ளும் என்றும்— ஏனைய ஐந்தும் வடக்கில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றும்— இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்ததாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது (எ-10)

## குண்டுபொருத்திய வாகனம் தலைநகருக்கு வெளியே

### மறைத்து வைக்கப்பட்டுள்ளதாம்

கொழும்பு, ஓக. 20

கொழும்பு நகருக்குள் நுழைந்ததாக பாதுகாப்புத் துறையினருக்கு தகவல் கிடைத்த குண்டு பொருத்தப்பட்ட புலிகளின் வாகனம் தற்போது தலைநகருக்கு வெளியே உள்ள பகுதியில் மறைத்துவைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

'லங்காதீப' சிங்கள பத்திரிகை இப்படி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வாகனத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலீஸார் முழு அளவில் வலைவிரித்துள்ளதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் கொட்டகெதெனியா தெரிவித்துள்ளார் என்றும்—

தலைநகரில் முக்கியமான இடமொன்றில் வெடிக்க வைக்கும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளால் இந்த வாகனம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக இரகசியப் பொலீஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அப்பத்திரிகைமேலும் தெரிவிக்கிறது. (இ-10)

## வெடிகுண்டுவாகனம் பற்றி தமக்கு தகவல் இல்லையாம்

### பிரதி பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

வெடிகுண்டு பொருத்தப்பட்ட வாகனம் எதுவும் கொழும்பில் சுற்றித்திரிவதாக தமக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர் எச். எம். டி. பி. கொட்டதெனிய தெரிவித்துள்ளார்.

180 கிலோ குண்டு பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று கொழும்பில் சுற்றித் திரிவதாக அண்மையில் கொழும்பில் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

இது பற்றி கருத்துத் தெரிவித்த பிரதிப் பொலீஸ் மா அதிபர் தமக்கு இது பற்றி தகவல் கிடைக்கவில்லை என்றும் — எனினும் கொழும்பில் பாதுகாப்பைப் பலப்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

சுற்றி வளைப்புகளும், தேடுதல்களும் அடிக்கடி இடம் பெற்றுவரும் தற்போதைய நிலையில், இத்தகைய குண்டு பொருத்தப்பட்ட வாகனம் சுற்றித் திரிவது சாத்தியமில்லை என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஓக 20

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கான ஜூலை, ஓகஸ்ட் மாதச் சம்பளக் கொடுப்பனவுகளை இதுவரை பெறத் தவறியோர் நாளை திங்கட்கிழமை காலை 9மணி முதல் 11மணிவரை, யாழ். வர்த்தக வங்கிக் கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-எ)

## தையல் பயிற்சி விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின் தையல் பயிற்சி விற்பனை நிலைய ஆரம்ப விழாவும், திருநெல்வேலி கூட்டுறவுக் கிராமிய வங்கி இடமாற்றமும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு, சங்கக் காரியாலயத்தில், நல்லூர் பிரதேச செயலரினாலும், தமிழீழ நிர்வாக சேவைக் கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளரினாலும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். (எ)

## தவறவிட்ட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஓக. 20

ஏழாலை, குப்பிளான் தெற்கைச் சேர்ந்த செல்வி சந்திரதயா காந்தரூபியின் அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு உதயன் அலுவலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. உரியவர் அதை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



வையகம்: 07 — 02 — 1957

வானகம்: 21 — 07 — 1995

### திருமதி தர்மசேகரம் ஜெயலட்சுமி

''அன்பு, பாசம் காட்டி எமை ஆதரித்து
இன்முகம் காட்டி உபசரித்து
துன்பக் கடலில் மூழ்க வைத்தாயே
உன் நீங்கா நினைவுடன் என்றும் நின்று
ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (20-08-95) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் தவறாது கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்:

சே. தர்மசேகரம் (கணவன்),
தாய், சகோதரிகள்.

பவானி வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

[38082]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 06 — 1937

மறைவு: 10 — 09 — 1993

### அமரர் சரவணமுத்து விசுவலிங்கம்

திதி: 20 - 08 - 1995

ஆண்டு இரண்டு சென்றாலும்
உங்கள் பிரிவு எம்மை விட்டு அகலாது

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்,

அன்பு, மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.

(38107)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

### மகாபொல கொடுப்பனவு 1993/94

மருத்துவபீட மாணவர்களுக்கு 5ஆம், 6ஆம் தவணைப் பணங்களும், ஏனைய மாணவர்களுக்கு 6ஆம், 7ஆம் தவணைப் பணங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான நேரஅட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

(சி/2076)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம் ஆவணித் திங்கள் 04ஆம் நாள் (20-08-95) ஞாயிற்றுக்கிழமை பகல் 10-55 மணி முதல் 12-00மணி வரையுள்ள தசமித்திதியும் மிருகசீரிட நட்க்ஷத்திரமும். சித்தயோகமும் கூடிய மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| திரு. திருமதி சுப்பிரமணியம் (ஞான வைரவர் கோவிலடி - கோண்டாவில்) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் **உதயகுமார்** அவர்களுக்கும் | திரு. திருமதி சுந்தரலிங்கம் (ஞானவைரவர் கோவிலடி - கோண்டாவில்) தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி **சயிலா** அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்; 92, Bis Bd. Montparnasse, 75014 - Paris.
(Mo: Montparnase Bienvenue)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

| | |
|---|---|
| திரு. திருமதி க. க. சுப்பிரமணியம் குடும்பத்தினர், ஞான வைரவர் கோவில் வீதி, கோண்டாவில் கிழக்கு- கோண்டாவில். | திரு. திருமதி வீ. த. சுந்தரலிங்கம் குடும்பத்தினர். ஞான வைரவர் கோவில் வீதி, கோண்டாவில் கிழக்கு - கோண்டாவில். |

[இருவீட்டார் அழைப்பு] (38112)

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## என்னே மனிதாபிமானம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில், அரசாங்க அதிபரின் பொறுப்பில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் கையிருப்புத் தீர்ந்து மூன்று நாள்கள் கடந்து விட்டன.

குடாநாட்டு மக்களின் உணவுக் கஷ்டத்தை உணர்ந்து, பட்டினிச் சாவுகளைத் தவிர்க்க வேண்டும் என்ற மனிதாபிமான சிந்தையுடன் ஒப்பந்தம் இல்லாமலே வடக்கே வரும் உணவுக் கப்பல்களுக்குத் தற்காலிகமாக பாதுகாப்பு வழங்குவதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு முன்வந்துள்ளது.

எனினும், நான்கு நாள் கடந்தும், செஞ்சிலுவைச் சங்கத்தின் அந்த அரிய சேவையை ஏற்றுக் கொண்டு வடக்கே உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு அரசு மனங்கொள்ளவில்லை

அதற்கு மாறாக, குடாநாட்டில் மூன்று மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாகப் பொய் கூறி நாளைக் கடத்துகிறது. அரசாங்க அதிபரின் பொறுப்பிலே உணவுப் பொருள்களை அனுப்பப் போவதாக, நடைமுறைச் சாத்தியமற்ற திட்டம் குறித்தும் அலட்டிக் கொள்கிறது!

உணவுப் பொருள்களை வடக்கே கொண்டு வருவதில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஆற்றும் பணியைப் புறக்கணித்து ஒதுக்கிவிடுவதன் மூலம் —

அதனை அவமதித்து வடக்கிலிருந்து வெளியேற்றுவதே அரசின் உள்ளாந்தர நோக்கம்.

செஞ்சிலுவைச் சங்கம் இங்கிருப்பதால் வடக்கு நிலைமை குறித்துப் பொய்களைக் கூறி வெளி உலகத்தை முற்றாக ஏமாற்ற முடியாத சங்கடம் ஒன்று அரசுக்கு உண்டு. நவாலித் தேவாலயச் சம்பவம் அதற்கு ஓர் உதாரணம்.

இராணுவ உயர் அதிகாரிகளோ, செஞ்சிலுவைச் சேவையைப் பெறுவதானால் அது தமது போர் நடவடிக்கைகளுக்கு உதவுவதாக இருக்க வேண்டும் என்று நிபந்தனை போடுகிறார்கள். செஞ்சிலுவைப் பாதுகாப்புடனேயே, ஆயுதங்களையும், துருப்புகளுக்கு வேண்டிய பொருள்களையும் கொண்டு வருவதற்கு விரும்புகிறார்கள். அவர்கள் தமக்குத் தேவையானவற்றை தமது சொந்தப் பாதுகாப்பில் கொண்டு வர முடியாமல், கடற்புலிகள் பெரும் சவாலாக இருப்பதே இதற்குக் காரணம்

வடக்கு வாழ் தமிழ் மக்களைத் தனது பிரஜைகள் என்று உரிமை கொண்டாட முயலும் அரசாங்கத்திடம் —

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனம் ஒன்றிடம் இருக்கும் மனிதாபிமானமும், மனித நேயமும் சொற்பமேனும் இல்லாதிருப்பது — இப்போது அப்பட்டமாகத் தெரிகிறது! தமிழர்களைக் கொன்றொழிக்கப் புறப்பட்டிருக்கும் அரசிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்ப்பது தவறுதான்!

ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை பேணும் நிலைமை திருந்திவிட்டதாக அறிக்கைகள் விடும் அமெரிக்கா போன்ற வெளி உலகத்துக்கு வடக்கு உணவுக் கப்பல் விவகாரம் சமர்ப்பணம்!

# மேலும் 13 மாவீரர்களுக்கு இன்று கோப்பாயில் நினைவுக்கல் நடப்படும்

## அணிவகுப்பு மரியாதையுடன் திருவுருவப்படங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 20

கடந்த மாதம் 28ஆம் திகதி மணலாற்றுப் பகுதி கொக்குத்தொடுவாயில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஐந்து முகாம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பெரும் சமரில் வீரச்சாவைத் தழுவி வித்துடல் கிடைக்கப் பெறாத மேலும் 13 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் இன்று மாலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரர்களின் நினைவுக்கற்கள் நடப்படும்.

அதற்கு முன் இன்று காலை 10-00 மணிக்கு திருவுருவப் படங்கள் அவரவர் இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மாலை 4-00 மணியளவில் மக்களின் இறுதி வீரவணக்கத்துக்காக புத்தூர் மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும். அங்கிருந்து திருவுருவப் படங்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும்.

13 மாவீரர் விவரம் வருமாறு:-

வீரவேங்கை. பரணி (தர்மராஜா சிவானந்தினி) பிள்ளையார் கோவிலடி, மூளாய்

கப்டன் பார்த்திபா [சிவராஜா சுபதா] வீரபத்திர கோவிலடி, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்

லெப். நவம் (மாணிக்கம் ஜெயவதனா) ஊரெழு கிழக்கு, சுன்னாகம்

லெப். மலரினி [அருச்சுனன் உமாதேவி) மதவடி ஒழுங்கை, கட்டுடை மானிப்பாய்

2 ஆம் லெப். பூங்குழலி (மகாலிங்கம் தர்சினி] தென்னைமரவாடி, திருகோணமலை த.மு - ஏழு கோவிலடி ஏழாலை மத்தி, ஏழாலை

2 ஆம் லெப். தாயகி (நாகமுத்து ஜெயராணி) சரள வீதி இணுவில்

மேஜர் மாதங்கி [சண்முகராஜா ஜீவலதா] கலாசாலை வீதி திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி

லெப். லவேகாநந்தினி (குணநாதன் கௌரி] கந்தர் மடம், த. மு: வெ. பசுபதி, இல. 12, 4ம் ஒழுங்கை, அரசடி றோட், கந்தர்மடம்.

2ம் லெப். தட்சாயினி (மகாலிங்கம் செல்வராணி) கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு.

லெப். நாயகி [கந்தசாமி சாந்தி) நவக்கிரி, புத்தூர் கிழக்கு.

வீரவேங்கை. சிவமலர் (சுப்பிரமணியம் அன்னலட்சுமி) வவுனியா, த. மு: புத்தூர் மேற்கு, நவக்கிரி.

2ம் லெப். அல்லி (நாகமுத்து கண்மணி) காரைநகர், த. மு: தேவராசா ருக்குமணி, புதுக்குடியிருப்பு, பொம்மை வெளி.

வீரவேங்கை. தங்கலட்சுமி [யேம்ஸ் ஜெனார்த்தனி) இல. 9/1, துண்டி, கடற்கரை வீதி, கொழும்புத்துறை. (இ)

## புலிகளின் குரல் வானொலியில்

20 – 08 – 1995

ஞாயிறு இரவு

★ 8-02 — இசையரங்கம் — நிகழ்ச்சியில் தவில் வாத்தியக் கச்சேரி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர்நாடகம் - பொன். கணேசமூர்த்தி எழுதிய 'இலங்கை மண்' 7ஆம் அங்கம்

21 – 08 – 1995

திங்கள் காலை

★ 7-03 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

ஞாயிறு மாலை

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதினவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ். குருநகர் ஆரோக்கிய நாதர் ஆலயத் திருநாள் இன்று பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மாதம் 27 ஆம் திகதி திருநாள் திருப்பலியும் தொடர்ந்து ஆலயப் பங்குத் தந்தை அருட் திரு சார்ள்ஸ் கொலின் தலைமையில் புனிதரின் திருச் சொரூப பவனியும் இடம்பெறும்.

(எ)

### பொருண்மிய நிறுவனத்தின்

## நல்லூர் கண்காட்சியில் சேமிப்பு சான்றிதழ் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் உற்சவகால கண்காட்சியை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழு பகுதியின் கிராமிய நிதியத்தினால் விசேட சேமிப்புச் சான்றிதழ் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வனால் இந்தச் சேமிப்புத் திட்டம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இருபது வீத வட்டி வீதத்தில் நடைமுறைப் படுத்தப்படும் இச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பலர் சேமிப்புகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## காட்சியக தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக 20

நல்லூரில் நடைபெறும் பொருண்மிய கண்காட்சியை பார்வையிடும் மக்களுக்கென ''மனம் கவர்ந்த காட்சியகத் தெரிவுப்போட்டி'' என்னும் பரிசுப் போட்டியை தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தினர் நடத்தி வருகின்றனர்.

கண்காட்சியில் ஒவ்வொரு காட்சி அறையையும் பார்வையிட்டு மனங்கவர்ந்த காட்சியகத்தை தெரிவு செய்வோரில் பொருத்தமான தெரிவை மேற்கொள்வோருக்கு குலுக்கல் முறை மூலம் பரிசு வழங்கப்படவுள்ளது. [ஐ]

## வாகரைப்பகுதி நோக்கி இராணுவ நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 20

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியை நோக்கி இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பித்திருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட படையினர் பல முனைகளில் இருந்து புதன்கிழமை அதிகாலை முதல் வாகரைப் பகுதியை நோக்கி முன்னேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது இடையில் கிராமங்கள் பல படையினரின் சுற்றிவளைப்பு தேடுதலுக்கு உள்ளாகின.

இதனால் மயிலங்கரச்சை, கட்டுமுறிவு' நாசிவன்தீவு, வட்டவான், இறால் ஓடை, காயங்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் காட்டுப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பகுதிகளில் பலத்த ''ஷெல்'' சத்தங்கள் கேட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## கோழி குப்பையைக்கிளற கிரனேட் குண்டு வெடித்தது!

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

வட்டுக்கோட்டை, ஓக. 20

கோழி ஒன்று குப்பையைக் கிளறியபோது அதற்குள் மறைந்து கிடந்த கிரனேட் ஒன்று திடீரென வெடித்தது.

இச் சம்பவம் கடந்த வெள்ளியன்று காலை வட்டுக்கோட்டை முதலிய கோவிலடி ஒழுங்கையில் உள்ள ஒரு வீட்டின் முன்பாக இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. குப்பையைக் கிளறிய கோழி உடல் சிதறிப் பலியானது

அண்மையில் இப்பகுதியில் படையினர் மேற்கொண்ட ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது படையினர் விட்டுச் சென்ற கிரனேட்டே இவ்வாறு வெடித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-க-161]

## கூட்டணி மீண்டும் ஜனாதிபதியை சந்திக்கும்

கொழும்பு, ஓக. 20

இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வு யோசனைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியுடன் மற்றொரு சுற்றுப்பேச்சு நடத்த உள்ளது.

கூட்டணியின் துணைத் தலைவரும் முன்னாள் எம்.பி. யுமான வீ.ஆனந்தசங்கரி இதனைத் தெரிவித்தார். (இ-க)

## பங்கீட்டு அடிப்படையில் சீனி

தென்மராட்சி, ஓக. 17

பங்கீட்டு அடிப்படையில் சீனி இந்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளது.

ஒன்று, இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோவும், மூன்று, நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு இரண்டு கிலோவும், ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு மூன்று கிலோவும் வழங்கப்படவுள்ளதாக யாழ் செயலகத்தினால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-117]

## நீதிமன்றில் பொருள்கள் ஏலத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 18

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட பொருள்கள் ஏலத்தில் விற்கப்பட உள்ளன.

வழக்குகளில் சொல்லப்பட்ட தீர்ப்புகளின் பிரகாரம் சம்பந்தப்பட்டவர்கள் பணத்தைச் செலுத்தி குறிப்பிட்ட பொருள்களை நாளை 18 ஆம் திகதிக்கு முன்னர் மீட்டுக் கொள்ள வேண்டும் என்றும் —

அப்படி மீட்கப்படாத பட்சத்தில் நாளை மறுதினம் 19 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு குறித்த நீதிமன்றில் இப்பொருள்கள் ஏலத்தில் விடப்படும் என்றும் மன்றின் நீதியாளர் அறிவித்துள்ளார். [இ]

### உணவு...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரவாதம் அளிக்கமுடியும் என்றும் —

காங்கேசன் துறைமுகத்தில் பொருள்களை இறக்குவதற்குத் தம்மால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதற்கு இயலாது என்றும் —

காங்கேசன் துறைமுகத்தில் கப்பல்களைக் கடற்படையினர் சோதிப்பதற்கு இணக்கம் தெரிவிப்பதாகவும் — செஞ்சிலுவைச் சங்கத்தினர் தமது புதிய வரைமுறைகளில் தெரிவித்திருந்ததாகவும் ஜனாப்ஜானைட் கூறினார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்ட 'லங்கா முடிதா' கப்பல் உணவுப் பொருள்களுடன் காங்கேசன் துறையில் நிற்பதாகவும் —

இரண்டு கப்பல்கள் பொருள்களை ஏற்றியபடி கொழும்புத் துறைமுகத்தில் காத்து நிற்பதாகவும் — அரசாங்க அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த மாதம் 17 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு உணவுக் கப்பல்கள் எதுவும் செல்லவில்லை. போருடன் உணவுப் பற்றாக்குறையையும் மக்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாக சுயாதீன செய்தி ஏஜென்சிகள் கவலை தெரிவித்தன. [அ-4-6]

## பெயர் மாற்றம்

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த
ஸ்ரீபாலன் ரஜீவன்
20 - 08 - 95 தொடக்கம் தனது பெயரை
ஸ்ரீபாலன் ராஜீவன்
என்று மாற்றியுள்ளார் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி இ. ஸ்ரீபாலன்
[தாய்]

(38129)

## வீரச்சாவு

### லெப். விவேகானந்தி
### [செல்வி. கௌரி குணநாதன்]

இந்துக் கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, 4 ஆம் ஒழுங்கை, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்வி கௌரி குணநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி- லெப். விவேகானந்தி) 28-07-95 அன்று மணலாறு இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச் சாவைத் தழுவிக் கொண்டார். இவர் குணநாதன் காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் இளைய மகளும், குணேஸ்வரி [கிராம அலுவலர் இணுவில் வட. கிழக்கு], கிரிஷாந்தி, சிறீதரன் ஆகியோரின் அன்புத் தங்கையும் திருமதி. கந்தசாமி ஞானேஸ்வரி, திருமதி. பசுபதி பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும், சண்முகதாஸ், கனகதாஸ் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லையா வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவரின் திருவுருவப்படம் அஞ்சலிக்காக இந்துக் கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கிலுள்ள அவர்களின் இல்லத்தில் வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு இன்று [20-8-95] எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் நினைவுக்கல் நடப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கு. சிறீதரன
[சகோதரன்)

(38131)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா முத்துத்தம்பி

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நல்லம்மா - முத்துத்தம்பி அவர்கள் 10-08-95 வியாழனன்று புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், திருமதி சாராதாம்பாள் அரியபுத்திரன், இலங்கநாதன் [ஜேர்மனி], ஸ்ரீகந்தராசா [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம், இராமசாமி, காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் மருதையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அரியபுத்திரன், ஞானகலா [ஜேர்மனி], நாகேஸ்வரி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியும், ரோகினி, இதயா, பிரனுஷன், இலக்கியா சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
கா. அரியபுத்திரன்
[மருமகன்]

11/8, பண்டாரக்குளம்,
மேற்கு ஒழுங்கை,
நல்லூர் வடக்கு.

[38127]

### திருமதி
### தையல்முத்து சிவகந்தையா

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், சிவநகர், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தையல்முத்து சிவகந்தையா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவகந்தையாவின் [சமாதான நீதிவான்] அன்பு மனைவியும், நெடுந்தீவு மேற்கு, ஆறுமுகம் நாகாத்தைப்பிள்ளையின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இவரின் மருமகன் சு. இராசலிங்கம் [உயரப்புலம் மெ. மி. த. க. பாடசாலை - உப அதிபர்] அவர்களின் கொக்குவில் மேற்கு, சேணியடி லேன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. இராசலிங்கம்
[மருமகன்]

[38130]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## முல்லைத்தீவில் மர்மக் கப்பல்

கொழும்பு, ஓக. 20

முல்லைத்தீவின் கிழக்குக் கடற்கரையில் மர்மக் கப்பல் ஒன்றை விமானப் படையினர் கண்டனர் என்றும்—

எச்சரிக்கையாக இருக்கும்படி கடற்படைக்கு விமானப் படையினால் அறிவிக்கப்பட்டதாகவும் ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது விடுதலைப் புலிகளின் கப்பலாக இருக்கலாம் என ஊகிக்கப்படுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-க)

## காலையில் மட்டும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம், ஓக. 20

மானிப்பாய் தனியார் வைத்திய சாலையில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு இந்த வாரத்திலிருந்து காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையுமே இயங்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மல்லாகம், கந்தரோடையில் இது வரை இயங்கிவந்த தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையின் விசேட சிகிச்சை நிலையங்கள் யாவும் இவ்வாரத்தில் இருந்து மானிப்பாயிலுள்ள தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் இயங்கும் என அறிவிக்கப்பட்டது. (ஒ-4)

### அனுராதபுரம்....
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அணி மீதும்—

விலாச்சி இராணுவ முகாமில் இருந்து பேமடுவ ஐந்தாம் குளம் நோக்கித் தடைகளை அகற்றியவாறு சென்று கொண்டிருந்த இராணுவ அணி மீதும் விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தினர். அச்சமயமே விடுதலைப் புலிகளின் கிளைமோர் கண்ணியில் சிக்கி பவள் கவச வாகனம் பலத்த சேதமடைந்தது. அதில் வந்த படையினரில் ஆறுபேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

விலாச்சி முகாமில் இருந்து வந்த படையினர் கடும்காயங்களுடன் பின்வாங்கித் தப்பி ஓடினர்.

10 நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்த வேக அதிரடித் தாக்குதலில் பவள் கவச வாகனத்தை புலிகள் கைப்பற்றி முற்றாக அழித்தனர்.

எதுவித இழப்பும் இன்றி நடத்தப்பட்ட இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ 81 மி மீ. மோட்டர்கள் — 02
★ அதற்குரிய ஷெல் — 17
★ பேஸ் பிளேட் — 02
★ பை போட் — 02
★ பூஸ்ரர் — 139
★ ஏ கே. துப்பாக்கி — 03
★ அவற்றுக்குரிய மகஸீன்கள் — 08
★ நடுத்தர ரவை — 210
★ கைக் குண்டுகள் — 04

(ஐ-4)

## கொழும்பில் உள்ள தமிழ் குழுக்கள்
## வயிற்று பிழைப்புக்காகவே அரசை ஆதரிக்கின்றன!
### சாடுகிறார் குமார் பொன்னம்பலம்

கொழும்பு, ஓக. 20

கொழும்பில் உள்ள தமிழ் குழுக்கள் அரசாங்கத்தை ஆதரிப்பது தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவே. அவ்வாறு ஆதரிக்காவிடின் அவர்கள் பட்டினியால் வாடவேண்டி வரும்.

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் இப்படிக் கூறியுள்ளார்.

''லங்காதீப'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசு யுத்தத்தை நடத்தியவாறே சமாதானத் திட்டத்தை முன்வைத்துள்ளது. யுத்தம் நடைபெறும் வேளையில் அரசின் தீர்வுத் திட்டத்தை ஆராய எனது மனச்சாட்சி இடம்தரவில்லை.

அமைதியை ஏற்படுத்த வேண்டிய தேவை அரசுக்கு இருப்பின் முதலில் யுத்தத்தை நிறுத்தவேண்டும்.

யுத்தத்தை நிறுத்தாமல் விடுதலைப் புலிகளின் நல்லுறவைப் பெற முடியாது.

தற்போது சிங்கள மக்கள் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சியே தமிழர்கள் மீது கலவரங்களை மேற்கொள்வதில்லை என்பதே எனது நிலைப்பாடாகும். இவ்வாறு குமார் பொன்னம்பலம் அப் பேட்டியில் மேலும் கூறியுள்ளார். [ஐ-10]

## புலிகளுக்கு தீர்வுயோசனை அனுப்பப்படாதது ஏன்?
### பீரிஸ் தெரிவிக்கும் காரணம்

புலிகளுடன் மீண்டும் நாம் பேசுவது என்றால் அது நாட்டுக்கும் ஆயுதப் படைகளுக்கும் நாம் செய்யும் நியாயமான காரியமாக இருக்கமாட்டாது. அதனால்தான் தீர்வு யோசனைகளை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பி வைக்கவில்லை.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவி ஏற்ற கடந்த ஒருவருட காலத்தில் அரசியல் ரீதியில் உங்களுக்கு கவலை தந்த விடயம் எது? என்று செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பீரிஸ் பதில் அளிக்கையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் முறித்துக் கொண்ட செயல்தான் என்றார். (இ)

### மட்டக்களப்பு நகர...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவபாதம் — பெரியபோரதீவு]

★ வீரவேங்கை தனுராஜ் [சாமித்தம்பி ஜெயசீலன் — முறக்கொட்டாஞ்சேனை]

★ வீரவேங்கை தங்கத்துரை [காஞ்சிநாதன் கணபதிப்பிள்ளை — சித்தாண்டி ஆகிய போராளிகள் விழுப்புண் அடைந்தபின் நேற்று முன்தினமும் வீரச்சாவடைந்தனர். [ஐ-4]


## பதவி வெற்றிடம்

Mc. Leod வைத்தியசாலை இணுவிலில் Accounts Clerk பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

கல்வித் தகைமைகள்:
க.பொ.த.(சாதாரணம்) பரீட்சையில் ஆங்கிலம் கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட கணக்கியலிலும், தட்டச்சிலும் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 28 — 08 — 95

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
வைத்திய அதிகாரி,
Mc. Leod வைத்தியசாலை,
இணுவில், சுன்னாகம்.

(சி-2081]

## அன்பார்ந்த தமிழீழ மக்களே!

தமிழீழத்தின் தற்சார்பு பொருண்மியத்தை
நோக்கிய நகர்வின் ஒரு வெட்டுமுகத்தினை
தரிசித்திட
நல்லூருக்கு வாருங்கள்.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன
பொருண்மியக் கண்காட்சியை
தவறாது பாருங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

[சி/2064]